**தீர்ப்பனவு உத்தரவாத நிதியம் - 2016**

---

இலங்கை பிணையங்கள் மற்றும் பரிவர்த்தனை ஆணைக்குழுவின் தீர்ப்பனவு உத்தரவாத நிதியத்தின் 2016 திசெம்பர் 31 இல் உள்ளபடியான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டுக்கான நிதி செயலாற்றல் கூற்று, தேறிய சொத்துக்களில் மாற்றக் கூற்று, காசுப் பாச்சல் கூற்று மற்றும் முக்கிய கணக்கீட்டுக் கொள்கைகளையும் ஏனைய வெளிப்படுத்தல் தகவல்களின் பொழிப்புக்களையும் உள்ளடக்கிய 2016 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டுக்கான நிதிக்கூற்றுக்கள் 1987 இன் 36 ஆம் இலக்க இலங்கை பிணையங்கள் மற்றும் பரிவர்த்தனை ஆணைக்குழு அதிகாரச்சட்டத்தின் பிரகாரம் உத்தரவாத நிதியத்தை தாபிப்பதுடன் தொடர்புடைய 1998 மே 21/22 ஆந் திகதிய 1376 ஆம் இலக்க நம்பிக்கைப்பொறுப்பு உரித்தாவணத்தின் 11(ஈ) ஆம் பந்தியுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(3) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன.

**1.2 நிதிக்கூற்றுக்கள் தொடர்பில் முகாமைத்துவத்தின் பொறுப்பு**

---

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

**1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு**

---

எனது கணக்காய்வின் அடிப்படையில் நிதிக்கூற்றுக்கள் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். அதி உயர் கணக்காய்வு நிறுவனத்தின் சர்வதேச கணக்காய்வு நியமங்களைப் (ISSAI 1000 - 1810) பின்பற்றி இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்க நெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களில் உள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் நிதியத்தின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி நிதியத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறன் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக கருத்திற்கொள்ளவில்லை. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டு மொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது.

எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

## 2. நிதிக்கூற்றுக்கள்

### 2.1 அபிப்பிராயம்

இலங்கை பிணையங்கள் மற்றும் பரிவர்த்தனை ஆணைக்குழுவின் தீர்ப்பனவு உத்தரவாத நிதியத்தின் 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாச்சலினையும் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

## 3. நிதிசார் மற்றும் செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 நிதிசார் விளைவுகள்

பரிவர்த்தனை ப்பிக்கப்பட்ட நிதிக் கூற்றுக்களின்படி, 2016 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதியத்தின் தொழிற்பாடுகள் முன்னைய ஆண்டின் நேரொத்த ரூபா36,068,602 மிகையுடன் ஒப்பிடுகையில் ரூபா 59,400,435 மிகையை விளைவித்திருந்தமையால், நிதி விளைவுகளில் ரூபா 23,331,833 அதிகரிப்பை காட்டுகின்றது. முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் வட்டி வருமானம் அதிகரித்தமை பிரதான காரணமாகும்.

### 3.2 நிதியம்

#### 3.2.1 குறிக்கோள்கள்

நிதியதிதின் குறிக்கோள்கள்

(அ) மத்திய வைப்பக முறைமையின் தீர்வக அங்கத்தவர்களிடையே வியாபார தீர்ப்பனவுகளை உதிதரவாதமளிக்கும் நோக்கத்திற்காக நிதியங்களை பெறுவதற்கும் வழங்குவதற்கும் இதுவரை இது மத்திய பங்கு வைப்பகம் மற்றும் தீர்ப்பனவு மற்றும் தீர்ப்பனவு வசதி என்பவற்றின் செயற்பாடுகளை வழங்குவதற்கு ஒரு நிறுவனமாக செயற்படுவதற்கு தொடரப்படும்.

(ஆ) வரையறைகளின்றி மேலே குறிப்பிட்ட (அ) குறிக்கோள்கள் மற்றும் நோக்கங்கள் போன்றவற்றை அடைவதன் ஊடாக ஏனைய எல்லா செயற்பாடுகளையும் மேற்கொள்வதற்கும் ஏனைய எல்லா அளவீடுகளையும் உள்ளடக்குவதும் அத்தகைய எல்லா துணிகர முயற்சிகளையும் மேற்கொள்ளுதல்

#### 3.2.2 தொழிற்பாடுகள்

1998 மே 21/22 ஆந் திகதிய 1376 ஆம் இலக்க நம்பிக்கைப்பொறுப்பு உரித்தாவணத்தின் 5(அ) பந்தியின் பிரகாரம் மத்திய வைப்பக முறைமையின் தீர்வக அங்கத்தவர்களிடையே எவ்வித முரண்பாடுகளும் அறிவிக்கப்படாமை காரணமாக நிதியத்திலிருந்து மீளாய்வாண்டின் போது எவ்வித இழப்பீடுகளும் செலுத்தப்பட்டிருக்கவில்லை.